අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/6/1

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.02.27

**சுற்றுநிருப இலக்கம் : 08 / 2024**

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவெனாதிபதிகள்,
அனைத்து அதிபர்கள்

## அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டிகள் - 2024

கல்வி அமைச்சின் நெறிப்படுத்துகையுடன் வருடாந்தம் நடாத்தப்படும் மேற்படி போட்டிகளின் 2024 வருடத்திற்குரிய நிபந்தனைகள், ஆலோசனைகள் மற்றும் ஆக்கங்களை முன்வைக்க வேண்டிய போட்டி நிகழ்ச்சிப் பிரிவுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய இச் சுற்றுநிருபத்தினை, உரிய போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து நடாத்துவதற்காக இத்தால் முன்னிலைப்படுத்துகின்றேன்.

02. இவ் விடயம் தொடர்பாக தங்களது மாகாணத்தின்/ வலயத்தின்/ கோட்டத்தின்/ பிரிவெனா கல்வி நிறுவனத்தின்/ பாடசாலையின் உரிய மாணவ/ மாணவிகள், ஆசிரியர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை அறியப்படுத்தி இப் போட்டிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், அவர்களது ஆக்கங்களை முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை ஒழுங்குசெய்யுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

வசந்தா பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

## *அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டிகள் 2024*

### *அறிமுகம்*

*நாட்டிலுள்ள பாடசாலைகளில் சித்திர ஆக்கங்களில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களது படைப்பாற்றல் மற்றும் நுண் திறன்களை விருத்தி செய்து இரசனை வலுக்களை மேம்படுத்துதல், அவர்களை ஆக்கங்களை உருவாக்கச் செய்வதனூடாக சித்திரக் கலை தொடர்பான செயன்முறை மற்றும் பாடம் சார்ந்த பல்வேறு அனுபவங்களையும் அவர்களுக்கு வழங்கும் நோக்குடன் இப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. பாடசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்தில் சித்திரப் பாடமானது தரம் **6** முதல் தரம் **13** வரையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால், இச் சித்திரப் போட்டியினூடாக அப் பாடத்தின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பு கிடைக்கும். மாணவர்களிடையே நல்ல மனப்பாங்கினை போஷிப்பதனூடாக தேசிய அபிவிருத்தியை குறிக்கோளாக கொண்டு சிறுவர்களது ஆளுமையை விருத்தி செய்வதற்காக இப் போட்டிகள் பங்களிக்கும். இப் போட்டிகளூடாக தேசிய மட்டத்தில் விருதுகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் உயர் கல்வியில் ஈடுபடும் போது முன்னுரிமை வழங்கப்படும்.*

## *1 போட்டிக்குரிய பொது அறிவுறுத்தல்கள்*

### *1.1 பங்குபற்றுகை மற்றும் முன்னிலையாதல்*

*அரச பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை மாணவர்களும் அனைத்து பிரிவெனா மாணவர்கள் மற்றும் பிக்குமார்களும், சர்வதேச பாடசாலைகள் மற்றும் இது போன்ற ஏனைய தனியார் பாடசாலை மாணவர்களும் மேற்படி போட்டியில் பங்குபற்ற முடியும்.*

*போட்டியில் முன்னிலைப்படுத்தப்படும் சகல ஆக்கங்களுக்கும் **A3** அளவிலான கடதாசி வகை ஒன்றை உபயோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கணணி சார்ந்ததாக மேற்கொள்ளப்படும் கிரபிக் வடிவமைப்பானது அச்சிடப்பட்ட A4 அளவிலான கடதாசியாக இருத்தல் வேண்டும். ஒரு மாணவனுக்கு அல்லது மாணவிக்கு ஒரு போட்டி நிகழ்ச்சிப் பிரிவில் மாத்திரமே பங்கேற்க முடியும்.*

*வலய மட்டத்தின் போது சித்திரம் வரைவதற்காக **A3** அளவிலான எந்தவொரு வகை கடதாசியையும் உபயோகிக்க முடியும் என்பதுடன், மாகாணப் போட்டிக்காக கல்வி அமைச்சினால் கடதாசிகள் வழங்கப்படும். போட்டியாளர்களால் முன்னிலைப்படுத்தப்படும் போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய வர்ணப் பூச்சுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் போட்டியாளர்களால் எடுத்துவரப்படல் வேண்டும். முதல் கட்டத்தில் பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் மாணவர்களுக்கு விருப்பமான தலைப்பில் தமது ஆக்கங்களை முன்னிலைப்படுத்த முடியும். கல்வி அமைச்சினால் நெறிப்படுத்தப்படும் தேசிய மட்ட இறுதிப் போட்டிகளில் சகல போட்டி நிகழ்ச்சிகளுக்கும் கல்வி அமைச்சினால் தலைப்புக்கள் வழங்கப்படும்*

***1.2 போட்டி உள்ளடக்கம் - 6-13 வரை வேறுபடுத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.***

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | | |
|---|---|---|---|---|
| | | திரவ ஊடகம் | திட ஊடகம் | கொலாஜ் அல்லது கலப்பு ஊடகம் |
| *6-7* | 1. கருத்து வெளிப்பாட்டு சித்திரம் | √ | √ | √ |
| | 2. நாகரீக வடிவமைப்பு | தாம் விரும்பிய ஊடகத்தில் | | |
| | 3. கிரபிக் வடிவமைப்பு | | | |

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | திரவ ஊடகம் | திட ஊடகம் | கொலாஜ் அல்லது கலப்பு ஊடகம் |
|---|---|---|---|---|
| *8-9* | 1. கருத்து வெளிப்பாட்டு சித்திரம் | √ | √ | √ |
| | 2. நாகரீக வடிவமைப்பு | தாம் விரும்பிய ஊடகத்தில் | | |
| | 3. கிரபிக் வடிவமைப்பு | | | |

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | திரவ ஊடகம் | திட ஊடகம் | கொலாஜ் அல்லது கலப்பு ஊடகம் |
|---|---|---|---|---|
| *10-11* | **நிறப்பூச்சு பூசுதல்.** | | | |
| | 1. கருத்து வெளிப்பாட்டு சித்திரம் (திரவ, திட, கொலாக், கலப்பு ஊடகம்) | √ | √ | √ |
| | 2. பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய நவீன ஆக்கம் | தாம் விரும்பிய ஊடகத்தில் | | |
| | 3. நிலத்தோற்றம் வரைதல் | | | |
| | 4. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல் | | | |
| | 5. அசையாத பொருட்களுடன் தழுவிய நவீன ஆக்கங்கள் | | | |
| | **அலங்காரங்கள்** | | | |
| | 6 உள்நாட்டு சம்பிரதாயபூர்வமான அலங்கார அலகுகளுடன் தழுவியதாக அலங்கார ஆக்கங்கங்கள் | | | |
| | 7. புதிய ஆக்கபூர்வமான அலங்கார ஆக்கங்கள் | | | |
| | 8. பல்வேறு வடிவங்களை உடைய பொருட்களுக்கு நவீனமய ஆக்கத் திட்டங்களை வரைதல். | | | |
| | **கிரபிக் வடிவமைப்பு (அச்சு ஊடகம்)** | | | |
| | 9. சுவரொட்டிச் சித்திரம் | | | |
| | 10. விளக்கச் சித்திரம் | | | |
| | 11. உற்பத்தி பொதி உறை / மேலுறை/ குறியீட்டு படிவம் | | | |
| | 12. புத்தக அட்டை | | | |
| | 13. செய்திப் பத்திரிகை காட்டூன் சித்திரம் | | | |
| | 14. கணணி சார் ஆக்கங்கள் | | | |

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | திரவ ஊடகம் | திட ஊடகம் | கொலாஜ் ஊடகம் | கலப்பு ஊடகம் |
|---|---|---|---|---|---|
| *12-13* | **நிறப்பூச்சு பூசுதல்** | | | | |
| | 1. கருத்து வெளிப்பாட்டு சித்திரம் | √ | √ | √ | √ |
| | 2. பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய நவீன ஆக்கம் | தாம் விரும்பிய ஊடகத்தில் | | | |
| | 3. பாரம்பரிய சித்திரங்களை பார்த்து வரைதல் | | | | |
| | 4. நிலத்தோற்றம் பார்த்து வரைதல் - | | | | |
| | 5. நிலத்தோற்றத்துடன் தழுவிய நவீன ஆக்கபூர்வமான | | | | |
| | 6. மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | | | | |
| | 7. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல் | | | | |
| | 8. அசையாத பொருட்களுடன் தழுவிய நவீன ஆக்கங்கள் | | | | |
| | நாகரீக வடிவமைப்பு | | | | |
| | 9. சம்பிரதாய அலங்கரிப்பு அலகுகளுடன் தழுவியதான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | | | |

| | | |
|---|---|---|
| | 10. புதிய ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | |
| | 11. பல்வேறு வடிவங்களை உடைய பொருட்களுக்கான நவீன ஆக்கத் திட்டங்களை வரைதல். | |
| | 12. **சம்பிரதாயபூர்வமான அலங்கார பாணிகளை பார்த்து வரைதல்**. | |
| | **கிரபிக் ஆக்கம் (அச்சு ஊடகம்)** | |
| | 13. சுவரொட்டிச் சித்திரம் | |
| | 14. விளக்கச் சித்திரம் | |
| | 15. புத்தக அட்டை | |
| | 16. உற்பத்தி பொதி உறை / மேலுறை/ குறியீட்டு படிவம் | |
| | 17. செய்திப் பத்திரிகை காட்டூன் சித்திரம் | |
| | 18. கணணி சார் ஆக்கங்கள் | |

## *2 ஊடகங்களின் வகைப்படுத்தல்*

### *2.1 கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊடகங்கள் வகைப்படுத்தப்படும்*

***திரவ ஊடகம்*** - *ஊடுகாட்டும் தன்மையுடையதாகப் பயன்படுத்தக்கூடிய நீர்வர்ணம், எக்ரலிக் போன்ற ஊடகங்களை பயன்படுத்தல்*

*திட ஊடகம்* - *நீர் வர்ணம், பெஸ்டல், சுவரொட்டி நிறச் சாயம், பேனை, பென்சில், கொலாஜ்; பப்ரிக் போன்ற ஊடகங்கள்(வகையில் பயன்படுத்தல் ஊடு காட்டாத ).*

*கொலாஜ் ஊடகம்* - *கொலாஜ் சித்திர நுட்பமுறையின் கீழ் இருபரிமாண மேற்பரப்பில் (ஒட்டுச்) ஊடகத்தையும் பொருள்களையும் பயன்படுத்தல்*

*கலப்பு ஊடகம்* - *ஒட்டுதல், சுரண்டுதல் போன்ற நுட்பங்களின் கீழ், மேலே தரப்பட்டுள்ள ஏதேனுமொரு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊடகங்களை உபயோகித்தல்*

## *3 போட்டி நிகழ்ச்சிகளும் விதிமுறைகளும்*

### *3.1 கருத்து வெளிப்பாட்டு சித்திரம்*

*தரம் 6 முதல் 13 வரையில் இப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். தரம் 6 முதல் 9 வரையில் இப் போட்டி நிகழ்ச்சியில் தாம் விரும்பிய ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தி சித்திரங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது. தரம் 10-11 மற்றும் தரம் 12-13 வகுப்புக்களுக்கு கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களை வரைவதற்காக திரவ ஊடகம், திட ஊடகம், கலப்பு ஊடகம் ஆகிய பிரிவுகளின் கீழ் ஆக்கங்களை முன்வைக்க சந்தர்ப்பமளிக்கப்படும். இந்த ஆக்கப் பிரிவிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *தலைப்பிற்குப் பொருத்தமான சூழ்நிலையினையும் சூழலையும் காட்டுதல்.*
- *வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்.*
- *பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு.*
- *ஊடகங்கள் மற்றும் நுட்பமுறைகளைப் பயன்படுத்தும் திறன்.*
- *பாவ வெளிப்பாடும் சிறப்பான முழு பூரணத்துவம்.*

### *3.2 பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய நவீன ஆக்கம்*

*உலகின் புராதன பாரம்பரியங்களுடன் தழுவியதாக மேற்கொள்ளப்படும் நவீன ஆக்கங்கள் இப் போட்டி நிகழ்ச்சிப் பிரிவுக்கு உட்பட்டதாகும். உ+ம்: அநுராதபுரம் மற்றும் பொலனறுவை காலத்து சித்திரங்கள், கண்டி சித்திரப் பாரம்பரியங்கள் மற்றும் முகலாய, ராஜ்பூத் பாரம்பரியங்கள் மாத்திரமல்லாது, எகிப்து, மற்றும் கிரேக்க சித்திரங்களின் குணாம்சங்களுடன் தழுவியதாக தயாரிக்கப்பட்ட நவீன ஆக்கங்கங்கள் இதன் கீழ் கருத்தில் கொள்ளப்படும். தரம் **10-11** மற்றும் தரம் **12-13** வகுப்புக்கள் இப் போட்டி நிகழ்ச்சிப் பிரிவில் பங்கேற்கலாம். பாரம்பரிய சித்திரங்களை அதே போன்று பார்த்து பிரதி செய்வது இதனூடாக எதிர்பார்க்கப்படவில்லை. இவ் ஆக்கப் பிரிவில் விரும்பிய வர்ண ஊடகத்தினை பயன்படுத்தி ஆக்கங்களை முன்வைக்க சந்தர்ப்பமளிக்கப்படும்*

*என்பதுடன் அவ் ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *தலைப்புக்குப் பொருத்தமான சூழ்நிலையையும் சூழலையும் காட்டல்*
- *வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்*
- *பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு*
- *ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்*
- *புதுமைப்பாடும் சிறப்பான நேர்த்தியான பூரணத்துவம்.*

## *3.3 பாரம்பரிய சித்திரங்களை வரைதல்*

*தரம் 12-13 வகுப்புக்கள் இப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்கலாம். கண்டி உடரட்ட மற்றும் பஹத ரட்ட சுவரோவியங்கள் மற்றும் இந்தியாவின் முகலாய மற்றும் ராஜ்பூத் ஓவியங்களை பார்த்து வரைவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. ட்ரேசிங் கடதாசியுடன் வரைந்து மேற்கொள்ளப்படும் பிரதி செய்தல் செயன்முறையினை இதற்காக பயன்படுத்தலாகாது. மேலே குறிப்பிடப்பட்ட பாரம்பரியத்திற்குட்பட்ட ஓவியங்களின் ஒரு பகுதியைக் கொண்ட புகைப் படம் ஒன்றை அவதானித்து அதன் குணாம்சங்களை பார்த்து வரைவதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். வலயப் போட்டிகளில் மாணவர்களால் கொண்டுவரப்படும் மேற்படி பாரம்பரியங்கள் தொடர்பான சித்திரங்களில் தமது சுய விருப்பின் படி ஒரு வகை புகைப்படத்தினை பார்த்து வரைவதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். அவ்வாறே தேசிய மட்ட போட்டியில் இதற்காக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் மேற்படி பாரம்பரியங்களுக்கு உரித்தான ஓவியம் ஒன்றின் புகைப்படத்துடன் தழுவியதாக வரைவதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். இவ் ஆக்கப் பிரிவில் விரும்பிய ஊடகத்தைக் கொண்டு ஆக்கங்களை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். குறித்த ஆக்கங்கள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *முதல் ஆக்கத்திற்குரித்தான அம்சங்கள் சூழ்நிலைகள் மற்றும் சூழலை காட்டுதல்.*
- *வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்*
- *பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு*
- *ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்*
- *சிறந்த நுட்பமான பூரணத்துவம்.*

## *3.4 உருவப்படச் சித்திரங்கள் (மார்பளவுப் படங்கள்)*

*தரம் 12-13 வகுப்பு மாணவர்களுக்கு உருவப் படச் சித்திரப் போட்டிப் பிரிவில் பங்கேற்க முடியும். இப் போட்டிப் பிரிவில் தாம் விரும்பிய ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தி ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் தாம் விரும்பிய அச்சுப் பிரதி அல்லது புகைப்படத்தைப் பார்த்து வரைவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதுடன், மாகாண மத்தியஸ்தத்தின் பின்னர் இறுதிப் போட்டியில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் புகைப்படம் ஒன்றுடன் தழுவியதாக சித்திரம் வரையுமாறு கோரப்படுவர். குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் கருத்தில் கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *பாத்திரத்தையும் இயல்புகளையும் காட்டல்*
- *அளவுப் பிரமாணப்படி வரைதல்*
- *முப்பரிமாணத் தன்மையும் இயல்புகளை நுணுக்கமாகக் காட்டலும்*
- *ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்*
- *பின்னனியை அர்த்தமுள்ள ரீதியில் காட்சிப்படுத்தல் மற்றும் ஒட்டுமொத்த பூரணத்துவம்.*

## *3.5 நிலத்தோற்ற சித்திரம்*

*நிலத் தோற்றத்தை வரைதல் சித்திரப் போட்டியில் தரம் 10-11 மற்றும் தரம் 12-13 மாணவர்கள் பங்கேற்க முடியும். தரம் 10-11 மாணவர்கள் நிலத் தோற்றத்தை அதே விதமாக வரைய வேண்டும் என்பதுடன் தரம் 12 மற்றும் 13 வகுப்புக்களுக்கு அடிப்படையில் இரண்டு போட்டிப் பிரிவுகள் காணப்படுகின்றன. தரம் 12 மற்றும் 13 வகுப்பு மாணவர்கள் நிலத் தோற்றத்தை அதே போன்று பார்த்து வரைதல் மற்றும் அவர்கள் காணும் நிலத் தோற்றத்தை தமது விருப்பப் படி ஆக்கபூரவமான முறையில் மாற்றியமைப்பதற்கும் சந்தர்ப்பமளிக்கப்படும். இதன் போது*

நிலத்தோற்றத்தை வரையும் போது காணக் கிடைக்கும் நிலத் தோற்றத்தின் நிறம், கோடுகள் (இரேகைகள்), மற்றும் வடிவங்களை வழமையான சித்திரக் கலைக் கருப்பொருட்களுக்கு அப்பால் சென்று தமது சுய விருப்பின் படி நவீன ஆக்கபூர்வமான பாணியில் கட்டியெழுப்பப்படும் ஆக்கங்களை முன்வைப்பது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. தரம் 10-11 வகுப்புக்களுக்கு 33 வெற்றிகளும், தரம் 12-13 வகுப்புக்களுக்கு நிலத்தோற்றத்தை பார்த்து வரைதல் போட்டிக்கு 60 வெற்றிகளையும், நிலத்தோற்ற ஆக்கபூர்வமான போட்டிப் பிரிவின் கீழ் 40 ஆக்கங்களும் இறுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு அழைக்கப்படும். அட்டவணை 3.2 இன் படி நிலத் தோற்றத்தை அதே போன்று வரையும் போதும் ஆக்கபூர்வமாக நிலத்தோற்றத்தை வரையும் போது அதற்காக தமது சுய விருப்பின் படி ஊடகம் ஒன்றை பயன்படுத்த சந்தர்ப்பமளிக்கப்படும். குறித்த போட்டியை 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் தெரிவு செய்யப்பட்ட இடம் ஒன்றில் நடாத்துவதற்கு கல்வி அமைச்சினூடாக நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன் தேவையான கடதாசிகளும் கல்வி அமைச்சினால் வழங்கப்படும்.

***நிலத்தோற்றத்தை பார்த்து வரைவதற்கான நியதிகள்***

- தெரிவு செய்த காட்சியைத் தளத்தின் மீது வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தல்.
- கோட்பாடுகளின் பயன்பாடு.
- ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்.
- நுணுக்கமான இயல்புகளைக் காட்டல்.
- புதுமைப்பாடான மற்றும் அர்த்தமுள்ள ரீதியிலான வெளிப்பாடு.

***புதிய ஆக்கபூர்வமான நிலத் தோற்ற சித்திரத்திற்கான நியதிகள்***

- தெரிவு செய்யப்பட்ட நிலத் தோற்றத்தை ஆக்கபூர்மான முறையில் தளத்தி மீது திட்டமிடல்.
- வடிவச்சுருக்கத்திற்கு பயன்படுத்திய பாணி மற்றும் மாதிரியை காட்டியுள்ள விதம்.
- வர்ண ஊடகம் மற்றும் நுட்ப முறைகளின் பொருத்தப்பாடு மற்றும் தேர்ச்சி.
- வடிவச்சுருக்கத்தின் போதும் பண்புகளை வெளிக்காட்டும் போதும் காட்டப்படும் போக்குகள்.
- நவீன மற்றும் அர்த்தமுள்ள ரீதியிலான வெளிப்பாடு.

## 3.6 அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல்

தரம் 10-11 மற்றும் தரம் 12-13 மாணவர்களுக்கு அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல் போட்டிப் நிகழ்சியில் பங்கேற்க முடியும். இதன் போது போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் பொருட்கூட்டத்தை பார்த்து வரையுமாறு கூறப்படும் என்பதுடன் அதற்காக கீழுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.

***நியதிகள்***

- தரப்பட்ட பொருள் தொகுதியைத் தளத்தின் மீது அர்த்தமுள்ள ரீதியில் ஒருங்கிணைத்தல்.
- பொருள்களை அளவுப் பரிமாணத்தின் படி காட்டுதலும் அவற்றின் இயல்புகளை வெளிக்காட்டுதலும்.
- கோட்பாடுகளின் பயன்பாடு தூரநோக்கு), முப்பரிமாண இயல்பு, கண்மட்டம்(.
- ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்.
- பின்னணியும் முழு பூரணத்துவம்.

## 3.7 நாகரீக வடிவமைப்பு

தரம் 6 முதல் 13 வரையான மாணவர்கள் இப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். தரம் 6 முதல் 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கு பொதுவாகவும். தரம் 10-11 மாணவர்களுக்கு கீழே இல. 1 முதல் 3 வரையான நாகரீக வடிவமைப்பு பகுதிகளிலும், தரம் 12-13 மாணவர்களுக்கு கீழே இல. 1 முதல் 4 வரையான பகுதிகளின் கீழும் இப் போட்டிகள் நடைபெறும். கீழுள்ள மூன்று பிரிவுகளில் ஒரு போட்டி நிகழ்ச்சியைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறாக தெரிவு செய்யப்பட்ட ஒரு துறையில் ஒரு ஆக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

1. ***உள்நாட்டு அலங்கார அலகுகளை பயன்படுத்தி இரு பரிமான அலங்கார ஆக்கம்***

உள்நாட்டு பாரம்பரிய அலங்கார அடிப்படை குணாம்சங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி நவீன அலங்கார ஆக்கங்களை மேற்கொள்வது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. (உ+ம்: பரவலாக்கப்பட்ட அலங்காரங்கள், முழுத் தள அலங்காரம். நிரல் அலங்காரம், கொடிப் பதாகைகள் மற்றும் சுவர் அலங்காரங்கள் போன்ற ஆக்கங்கள்)

2. **நவீன ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கம்**

*பாரம்பரிய அலங்கார அலகுகள் மற்றும் அவற்றின் அடிப்படை குணாம்சங்களுக்கு அப்பால் நவீனமய அலங்கார ஆக்கங்கள் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. (உ+ம்: பரவலாக்கப்பட்ட அலங்காரங்கள், முழுத் தள அலங்காரம். நிரல் அலங்காரம், கொடிப் பதாகைகள் மற்றும் சுவர் அலங்காரங்கள்)*

3. **பல்வேறு வடிவங்களையுடைய பொருட்களுக்கான நவீன ஆக்கத் திட்டங்களை வரைதல்**

*முப்பரிமான ஆக்கங்களுக்காக மாதிரி வடிவங்களை வரைவது இதனூடாக எதிர்பார்க்கப்படுவதுடன், தேவை ஏற்படின் மேற்புற அலங்காரம் செய்ய வேண்டும். முன் பக்கத் தோற்றத்தை மாத்திரம் வரைவது போதுமானது (உ+ம்: பயன்பாட்டுப் பொருட்கள்)*

*அவ்வாறே, இவ் ஆக்கப் போட்டி நிகழ்ச்சியில் தமது விருப்பத்தின் பிரகாரம் ஏதேனுமொரு ஊடகத்தைப் பயன்படுத்தி முன்வைப்புச் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படும். குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

**நியதிகள்**

- *ஆக்கச் செயற்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் நவீனத்தன்மையுடன் திட்டமிடல்.*
- *பயன்பாட்டுத் தேவைகளுக்குப் பொருத்தமானதாக இருத்தலும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் இருத்தல்.*
- *கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தும் திறன்.*
- *பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனும்.*
- *பல்வகைமை, நுணுக்கமான ஆக்கத்திறன், வெற்றிகரமான பூரணத்துவம்.*

4. **உள்நாட்டு அலங்கார அலகுகளை பார்த்து வரைதல்.**

*புராதன விகாரைகளின் வரையப்பட்டுள்ள பாரம்பரியமான சுவர் ஓவியங்களிடையே காணப்படும் சிங்கள அலங்காரங்களை பார்த்து வரைவது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. உ+ம்: அட்சர கணிதம், தாவரவியல், இயற்கையான அல்லது பகுதி இயற்கையான அலங்கார வகைகள் இதில் உள்ளடங்குகின்றன. ட்ரேசிங் கடதாசியுடன் வரைந்து பிரதியெடுக்கும் செயன்முறை இதற்காக பயன்படுத்தப்படலாகாது. இதன் போது மேலே தரப்பட்ட வகைக்கு உரிய அலங்கார சித்திரங்களின் பகுதியொன்றுடன் கூடிய புகைப்படம் ஒன்றை அவதானிப்பதன் மூலம் அதன் பண்புகளைப் பார்த்து வரைவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். வலய போட்டியின் போது மாணவர்களால் கொண்டுவரப்படும் மேற்படி பாரம்பரியங்கள் அலங்கார சித்திரங்களிடையே தமது விருப்பத்திற்குரிய வகை புகைப்படம் ஒன்றை பார்த்து வரைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் அவ்வாறே தேசிய மட்டப் போட்டியில். இதற்காக வழங்கப்படும் அலங்கார ஓவியம் ஒன்றின் புகைப்படம் ஒன்றை பார்த்து வரைவதற்கு வாய்ப்பளிக்கப்படும். இவ் ஆக்கத்திற்குரிய போட்டி நிகழ்ச்சியின் தமது விருப்பின் படி விரும்பிய ஆக்கத்தை முன்வைப்பதற்கு சந்தர்பம் வழங்கப்படுகின்றது. குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே தரப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

**நியதிகள்**

- *முதல் ஆக்கத்திற்குரித்தான அம்சங்களுக்கு சமமான வகையில் ஆக்கத்தை மேற்கொள்ளல்*
- *முதல் ஆக்கத்திற்கு சம விகிதத்திலும் பரிமாணங்களுக்கு அமைவாகவும் தமது மாதிரி உருவை பயன்படுத்தக்கூடிய திறன்*
- *கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் பொருளுள்ளவாறு பயன்படுத்தல்.*
- *பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனும்.*
- *பல்வகைமை, நுணுக்கமான ஆக்கம் மற்றும் வெற்றிகரமான பூரணத்துவம்*

## 3.8 கிரபிக் வடிவமைப்பு (சுவரொட்டி ஆக்கம், புத்தக அட்டை, பொதி உறை, குறியீட்டுப் படிவம் மற்றும் விளக்கச் சித்திரம்)

*தரம் 6 முதல் 13 வரையான வகுப்பினர் இப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். தரம் 6 முதல் 9 வரையில் பொதுவான முறையில் கிரபிக் வடிவமைப்புப் போட்டி நடைபெறும் என்பதுடன் குறித்த போட்டியில் எந்தவொரு கிரபிக் ஆக்கத்தையேனும் முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. தரம் 10-11 மற்றும் தரம் 12-13 வகுப்பினர் இந்த போட்டி நிகழ்ச்சிக்குரியதாக **சுவரொட்டி சித்திரம், புத்தக அட்டை, பொதி மேலுறை, குறியீட்டுப் படிவம் மற்றும் விளக்கச் சித்திரம்** என நான்கு பகுதிகளின் கீழ் தனித்தனியாக போட்டிகள் நடைபெறும். அவ்வாறே இப் போட்டி நிகழ்ச்சிகளில் விரும்பிய வர்ண ஊடகத்தில் ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *ஆக்கச் செயற்பாட்டிற்கு பொருத்தமானவாறு புதுமைப்பாட்டுடன் திட்டமிடல்.*
- *வணிக மற்றும் தொடர்பாடல் தேவைகளுக்காகப் பொருத்தமானதாக இருத்தலும் கைத்தொழிலுக்கு ஏற்றதாக இருத்தலும்.*
- *கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் அர்த்தமுள்ள ரீதியில் பயன்படுத்தும் திறன்.*
- *பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனும்.*
- *கவர்ச்சித் தன்மையும் வெற்றிகரமான முழுநிறைவும்.*

## *3.9 காட்டூன் சித்திரம்*

*தரம் 10-11 மற்றும் தரம் 12-13 வகுப்பினருக்காக இந்த போட்டி நிகழ்ச்சி நடைபெறும் என்பதுடன், விரும்பிய வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தி கருப்பு வெள்ளை அல்லது நிறங்களில் ஆக்கத்தை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். **<u>தேசிய, சமய, அரசியல், கலாசார மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு எந்தவித அவமானத்தையோ பாதிப்பையோ ஏற்படுத்தாத வகையில் ஆக்கங்கள் முன்வைக்கப்படல் வேண்டும்</u>**. அவ்வாறில்லாத ஆக்கங்கள் நிராகரிக்கப்படும். குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- *உள்ளடக்கம்/ விடயப்பொருளுக்கு அமைவான பாத்திரப்படைப்பு.*
- *வெளியின் மீது உருவங்களை வரைதல்.*
- *ஹாஷ்யத்தன்மையும் நடத்தைப் பண்புகளின் வெளிப்பாடும்.*
- *ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்.*
- *ஒட்டுமொத்த ஆக்கத்தின் வெற்றியும் நுணுக்கமான முழுநிறைவும்.*

## *3.10 கணிணி கிரபிக் ஆக்கங்கள்*

*தரம் **10-11** மற்றும் தரம் **12-13** வகுப்பு மாணவர்க்கள் இப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். கணிணி கிரபிக் ஆக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடிய ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மென்பொருள்களை இதற்காக பயன்படுத்தி பயன்பாட்டுப் பொருட்கள் அல்லது தொடர்பாடல் செயற்பாடுகளுக்குரியதாக அச்சிடப்படக்கூடிய ஆக்கம் ஒன்றை **A4** தாளின் அளவிற்கு திட்டமிட்ட நிறங்கள் கொண்டு அச்சிடப்பட்ட பிரதிகளை இப் போட்டி நிகழ்ச்சியில் முன்னிலைப்படுத்துதல் வேண்டும். வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கணிணி ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய பாடசாலை அல்லது வலய கணிணி நிலையத்திற்கு வரவழைத்து போட்டிகளை நடாத்தும் போது உரிய கணிணி நிலையத்திற்கு அவசியமான கணிணி சார் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போதும் ஏதேனும் தொழில்நுட்பம் சார் பிரச்சனைகளின் போது அவற்றை தீர்த்து வைப்பதற்காகவும் மாத்திரம் கணிணி அறிவுடன் கூடிய உத்தியோகத்தர் ஒருவர் அல்லது கணிணிப் பாட ஆசிரியர் ஒருவரது உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இணையத்தைப் பயன்படுத்தலாகாது என்பதுடன் கல்வி வலய மட்டத்தில் வழங்கப்படும் கணிணி சார் கருவிகள் தவிர்த்து வேறு எதவொரு மென்பொருள்களோ அல்லது வன் பொருள்களோ இதற்காக பயன்படுத்தப்பட முடியாது. கணிணி சாரி கிரபிக் வடிவமைப்பு போட்டி நிகழ்ச்சியின் வெற்றிபெற்றவர்களுக்கான இறுதிப் போட்டி நிகழ்ச்சியானது கல்வி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்படும். குறித்த ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக கீழே தரப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையாக கொள்ளப்படும்.*

***நியதிகள்***

- ***கிரபிக் ஆக்கத்திற்குப் பொருத்தமான உள்ளடக்கம்***
- ***வணிக ரீதியான மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்கு பொருத்தமான தன்மை***
- *கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் அர்த்தமுள்ள ரீதியில் பயன்படுத்தும் திறன்.*
- *பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறன்.*
- *கவர்ச்சித் தன்மையும் வெற்றிகரமான முழுநிறைவும்.*

## 4 போட்டி ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு மற்றும் கட்டங்கள்

### 4.1 போட்டிக் கட்டங்கள்

*அகில இலங்கை பாடசாலை சிறுவர் சித்திரப் போட்டிகள் 05 கட்டங்களின் கீழ் ஒழுங்குசெய்யப்படுகின்றன.*

| | |
|---|---|
| 1. முதலாம் கட்டம் | - வலய மட்டம் (கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆக்கங்களை வைத்து முதல் கட்ட மத்தியஸ்தத்தை மேற்கொண்டு வெற்றிபெற்றவர்களை வரவழைத்து வலயப் போட்டிகளை நடாத்துதல் |
| 2. இரண்டாம் கட்டம் | - மாகாண மட்டம் (மாகாணத்தின் வலயங்களுக்குடையேயான சித்திர மத்தியஸ்தம்) |
| 3. மூன்றாம் கட்டம் | - தேசிய மட்டப் போட்டிகளுக்காக கல்வி அமைச்சினூடாக முதல் மத்தியஸ்தம் |
| 4. நான்காம் கட்டம் | - கல்வி அமைச்சின் மூலம் நிலத் தோற்றம் மற்றும் கணிணி கிரபிக் ஆக்கப் போட்டிகளை நடாத்துதல் (படிநிலை 1) |
| 5. ஐந்தாம் கட்டம் | - கல்வி அமைச்சின் மூலம் தேசிய மட்டத்திற்குரிய ஏனைய போட்டிகளை நடாத்துதல் (படிநிலை 2) |

## 5 சித்திரப் போட்டி தொடர்பான வலய மட்ட ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் பணிகள்

*5.1 தமது கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை இந்தப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்வது பாடசாலை அதிபர்களது, சித்திரக் கலைப் பாட ஆசிரியர் ஆலோசகர்களதும், வலயத்தில் உள்ள சித்திரக் கலைப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களதும், வலயக் கல்விப் பணிப்பாளர்களதும் பொறுப்பாகும்.*

*5.2 அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டியில் ஒவ்வொரு பிரிவின் கீழும் பங்கேற்கும் மாணவர்களது ஆக்கங்களை பாடசாலைகளிலிருந்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கு முன்னிலைப்படுத்துவதற்கான இறுதித் திகதி 2024 மார்ச் மாதம் 22ம் திகதியாகும். அதற்கமைய இலங்கையின் அனைத்து கல்வி வலயங்களிலும் அமைந்துள்ள பாடசாலைகளினூடாக சமர்ப்பிக்கப்படும் மாணவர்களது ஆக்கங்களையும் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர், அப் பாடசாலைகள் உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகத்திற்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டும்.*

*5.3 பாடசாலைகளூடாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் ஆக்கங்களின் பின் புறமாக, கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட (ஆவண இல. 01) விண்ணப்பப் படிவத்தை ஒட்டி அதன் மீது அதிபரின் கையொப்பம் மற்றும் உத்தியோக பூர்வ பதவி முத்திரையைப் பதிப்பது கட்டாயமாகும்.*

*5.4 l வலய மட்டப் போட்டிகளுக்காக ஆக்கங்களை தெரிவு செய்வதற்குரிய மத்தியஸ்த சபையை நியமிக்கும் செயற்பாடு வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறிச் செல்லாத வகையில் வலயப் போட்டிகளுக்குரிய பெறுபேறுகளை வெளியிடும் இறுதியா தீர்மானம் எடுப்பவராக செயற்படுபவர் வலயக் கல்விப் பணிப்பாளராவார்.*

*5.5 அவ் அப் போட்டி நிகழ்ச்சிப் பிரிவுகளுக்குரியதாக வலய மட்டப் போட்டிகளின் (6.1 மற்றும் 6.2 ஐ பார்க்கவும்) பெறுபேறுகள் பட்டியல்களை 2024 ஏப்ரல் மாதம் 23ம் திகதிக்கு முன்னர், மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கையளிக்கப்படல் வேண்டும். உரிய வலயங்களின் பெறுபேறுகள் பட்டியல்கள் தயாரிக்கப்படும் போது குறிப்பிட்ட வெற்றியீட்டியவர்களது பெயர் பட்டியலானது வலயக் கல்விப் பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டு இரண்டு பிரதிகளை தயாரித்து ஒரு பிரதியினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், அடுத்த பிரதியை கல்வி அமைச்சின் அழகியல் கல்விக் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அனைத்து சித்திரங்களின் பின்புறத்திலும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட (ஆவண இலக்கம் 02) விண்ணப்பப் படிவம் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றில் **வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ பதவி முத்திர பதியப்பட்டிருப்பது கட்டாயாகும்**.*

*5.6 வலய மட்ட பெறுபேறின் மென் பிரதியினை, கல்வி அமைச்சின் அழகியல் பிரிவின்* aestheticeducation.moe.lk@gmail.com *எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

***5.7** வலயப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகள் அவ் அவ் வலயக் கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலாம். இரண்டாம், மற்றும் மூன்றாம் நிலைகளும் ஏனைய வெற்றியாளர்களுக்கு சிறப்புத் தேர்ச்சி விருதும், தேர்ச்சி விருதும் வழங்கப்படல் வேண்டும். தமது மாகாணத்தின் தேசிய மத்தியஸ்தத்திற்கு ஆக்கங்களை முன்னிலைப்படுத்தும் சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.*

## *6* வலய மட்டத்தில் சித்திரங்களை தெரிவு செய்வதற்கான செயன்முறை

### *6.1* தரம் *6-11* வரையானவர்களது சித்திரங்களை தெரிவு செய்தல்

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | | | ஒரு வலயத்திலிருநது தெரிவு செய்யப்படும் சித்திரங்களின் எண்ணிக்கை | மாகாண மத்தியஸ்தத்திற்கு அனுப்பப்படும் சித்திரங்களின் எண்ணிக்கை | தேசிய மத்தியஸ்தத்திற்கு அனுப்பப்படும் சித்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | திரவ ஊடகம் | திட ஊடகம் | கலப்பு அல்லது கொலாஜ் ஊடகம் | | | |
| 6-7 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | 23 | 20 | 20 | 63 | 63 | 567 (63X9) |
| | 2. நாகரீக வடிவமைப்பு | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | | | 63 | 63 | 567 (63X9) |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | | | | 63 | 63 | 567 (63X9) |
| 8-9 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | திரவ ஊடகம் | திட ஊடகம் | கலப்பு அல்லது கொலாஜ் ஊடகம் | 63 | 63 | 567 (63X9 |
| | | 23 | 20 | 20 | | | |
| | 2. நாகரீக வடிவமைப்பு | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | | | 63 | 63 | 547 (63X9) |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | | | | 63 | 63 | 547 (63X9) |
| 10-11 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | திரவ ஊடகம் | திட ஊடகம் | கலப்பு அல்லது கொலாஜ் ஊடகம் | 63 | 63 | 547 (63X9) |
| | | 23 | 20 | 10 | | | |
| | 2. பாரம்பரிய சித்திரங்களுடன் தழுவியதாக நவீன ஆக்கங்கள் | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | | | 38 | 38 | 342 (38X9) |
| | 3. நிலத் தோற்றத்தை வரைதல் | | | | 33 | 33 | 297 (33X9) |
| | 4. பொருட்களைப் பார்த்து வரைதல் | | | | 33 | 33 | 297 (33X9) |
| | 5. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்து இருபரிமான அலங்கார ஆக்கங்கள் | | | | 33 | 33 | 297 (33X9) |
| | 6. நவீன ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | | | 33 | 33 | 297 (33X9) |
| | 7. பல்வேறு வடிவங்களை உடைய பொருட்களுக்கான நவீன ஆக்கங்களின் திட்டங்களை வரைதல். | | | | 33 | 33 | 297 (33X9) |
| | 8. சுவரொட்டிச் சித்திரம் | | | | 38 | 38 | 342 (38X9) |
| | 9. விளக்கச் சித்திரம் | | | | 38 | 38 | 342 (38X9) |
| | 10. புத்தக அட்டை | | | | 38 | 38 | 342 (38X9) |
| | 11. பொதியுறை மற்றும் மேலுறை | | | | 38 | 38 | 342 (38X9) |
| | 12. கார்ட்டூன் சித்திரம் | | | | 38 | 38 | 342 (38X9) |
| | 13. கணிணி கிரபிக் ஆக்கங்கள் | **கணிணி பயன்பாடு** | | | 20 | 20 | 180 (20X9) |

### *6.2 தரம் 12-13 வகுப்புக்களின் சித்திரங்களை தெரிவு செய்யும் முறை*

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | திரவ ஊடகம் | திட ஊடகம் | கலப்பு ஊடகம் | கொலாஜ் | ஒரு வலயத்திலிருநது தெரிவு செய்யப்படும் ζச் எண்ணிக்கை | வலயங்களிலிருந்து மாகாண போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்களின் எண்ணிக்கை | மாகாணங்களிலிருந்து தேசிய மத்தியஸ்தத்துக் காக அனுப்பப்படும் சித்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1. கருத்து வெளிப்பாட்டு சித்திரம் | 20 | 20 | 20 | 20 | 80 | 60 | 720 (80X4X9) |
| | 2. பாரம்பரிய சித்திரங்களுடன் தழுவியதாக நவீன ஆக்கங்கள் | | | | | 60 | 60 | 720 (80X9) |
| | 3. பாரம்பரிய சித்திரங்களைப் பார்த்து வரைதல் | | | | | 30 | 30 | 270 (30X9) |
| | 4. நிலத் தோற்றம் – பார்த்து வரைதல். | | | | | 50 | 50 | 450 (50X9) |
| | 5. நிலத் தோற்றம் – ஆக்கபூர்வமான | | | | | 20 | 20 | 180 (20X9) |
| | 6. மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | | | | | 50 | 50 | 450 (50X9) |
| | 7. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல். | | | | | 50 | 50 | 450 (50X9) |
| 12-13 | 8. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | விரும்பிய வர்ண ஊடகத்தில் | | | | 50 | 50 | 450 (50X9) |
| | 9. நவீன ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | | | | 50 | 50 | 450 (50X9) |
| | 10. பல்வேறு வடிவிலான பொருட்களுக்கு நவீனமய ஆக்க திட்டங்களை வரைதல் | | | | | 50 | 50 | 450 (50X9) |
| | 11. சுவரொட்டிச் சித்திரம் | | | | | 30 | 30 | 270 (30X9) |
| | 12. விளக்கச் சித்திரம் | | | | | 30 | 30 | 270 (30X9) |
| | 13. புத்தக அட்டை | | | | | 30 | 30 | 270 (30X9) |
| | 14. பொதியுறை மற்றும் மேலுறை | | | | | 30 | 30 | 270 (30X9) |
| | 15. கார்ட்டுன் சித்திரம் | | | | | 10 | 10 | 90 (10X9) |
| | 16. கணிணி கிரபிக் ஆக்கம் | கணிணி பயன்பாடு | | | | 20 | 20 | 180 (20X9) |

## *7 சித்திரப் போட்டி தொடர்பான மாகாண ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் பணிகள்*

7.1 *இச் சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சித்திரப் பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் தனது மாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களிலி இருந்தும் தெரிவு செய்து அனுப்பிவைக்கப்படும் சித்திர ஆக்கங்களைப் பெற்று தேசிய மட்ட சுற்றுப் போட்டிக்கு தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து மேற்பார்வை செய்தல் வேண்டும். தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கும் போது வலயக் கல்வி அலுவலகங்களூடாக அனுப்பிவைக்கப்படும் சித்திர ஆக்கங்களுக்குரிய மத்தியஸ்தத்தை மாத்திரம் மேற்கொண்டு **(6.1 மற்றும் 6.2 அட்டவணைகளை பார்க்கவும்) 5.1** மற்றும் **5.2** இலுள்ள நிபந்தனைகளுக்கமைய வெற்றி பெற்றவர்களது பெயர் பட்டியலை கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். (வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட சித்திர ஆக்கங்கள் மற்றும் உரிய பெறுபேறுகள் பட்டியல்கள் ஒன்றுக்கொன்று சமமானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்)*

### *7.1.1 தரம் 6-11 மாணவர்களுக்கு வலய மற்றும் மாகாண மட்டத்தில் சான்றிதழ்களை வழங்குதல்*

| தரங்கள் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | முதலாம் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை | சிறப்புத் தேர்ச்சி விருது | தேர்ச்சி விருது | மொத்த விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6-7 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 05 | **23** |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | | **கலப்பு கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | 2. நாகரீக வடிவமைப்பு | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 35 | 25 | **63** |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 35 | 25 | **63** |
| 8-9 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 05 | **23** |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | | **கலப்பு கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | 2. நாகரீக வடிவமைப்பு | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 35 | 25 | **63** |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 35 | 25 | **63** |
| 10-11 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 05 | **23** |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | | **கலப்பு கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 15 | 02 | **20** |
| | 2. பாரம்பரிய சித்திரங்களுடன் தழுவியதாக நவீன ஆக்கங்கள் | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 3. நிலத் தோற்றச் சித்திரம் | | 01 | 01 | 01 | 20 | 10 | **33** |
| | 4. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல். | | 01 | 01 | 01 | 20 | 10 | **33** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி அலங்கார ஆக்கம் | | 01 | 01 | 01 | 20 | 10 | **33** |
| | 6. நவீன ஆக்கபூர்வமான அலங்கார ஆக்கம் | | 01 | 01 | 01 | 20 | 10 | **33** |
| | 7. பல்வேறு வடிவிலான பொருட்களுக்கு நவீனமய ஆக்க திட்டங்களை வரைதல் | | 01 | 01 | 01 | 20 | 10 | **33** |
| | 8. **சுவரொட்டிச் சித்திரம்** | | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 9. விளக்கச் சித்திரம் | | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 10. புத்தக அட்டை | | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 11. பொதியுறை மற்றும் மேலுறை | | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 12. கார்ட்டூன் சித்திரம் | | 01 | 01 | 01 | 25 | 10 | **38** |
| | 13. கணிணி கிரபிக் ஆக்கம் | கணிணிப் பயன்பாடு | 01 | 01 | 01 | 16 | 10 | **29** |

### *7.1.2* தரம் *12-13* மாணவர்களுக்கு வலய மற்றும் மாகாண மட்டத்தில் சான்றிதழ்களை வழங்குதல்

| **தரம்** | **போட்டி நிகழ்ச்சி** | **ஊடகம்** | **முதலாம்** | **இரண்டாம்** | **மூன்றாம்** | **ஞாபகார்த்த விருது** | **சிறப்புத் தேர்ச்சி விருது** | **தேர்ச்சி விருது** | **மொத்த விருதுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12-13 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | | **கலப்பு ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | | **கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | 2. பாரம்பரிய சித்திரங்களுடன் தழுவியதாக நவீன ஆக்கங்கள் | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | 3. **பாரம்பரிய சித்திரங்களை வரைதல்.** | | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |
| | 4. **நிலத் தோற்றம் - பார்த்து வரைதல்.** | | 01 | 01 | 01 | 02 | **25** | **20** | **50** |
| | 5. **நிலத் தோற்றம் – ஆக்கபூர்வமான** | | 01 | 01 | 01 | 02 | 10 | **05** | **20** |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 6. மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 7. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல். | | 01 | 01 | 01 | 02 | 25 | 20 | 50 |
| | 8. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 9. நவீன ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 10. பல்வேறு வடிவிலான பொருட்களுக்கு நவீனமய ஆக்க திட்டங்களை வரைதல் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 11. சுவரொட்டிச் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 12. விளக்கச் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 13. புத்தக அட்டை | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 14. பொதி உறை மற்றும் மேலுறை | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 15. கார்ட்டூன் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 16. கணணி கிரபிக் வடிவமைப்பு | கணிணிப் பயன்பாடு | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |

7.2 மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களது பெயர்களை அவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினூடாக அறியப்படுத்த வேண்டும் என்பதுடன், மாகாணத்தில் வெற்றி பெறுபவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் பணிகள் அவ் அம் மாகாணக் கல்வித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலையும், ஏனைய வெற்றியாளர்களுக்கு ஞாபகார்த்த விருதி, சிறப்புத் தேர்ச்சி விருது மற்றும் தேர்ச்சி விருது ஆகியவற்றை வழங்க வேண்டும்.

7.3 மாகாணப் போட்டிகளின் மத்தியஸ்தத்தின் போது குறித்த மத்தியஸ்த சபை சுற்றுநிருபத்தின் 7.1 மற்றும் 7.2 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளுக்கு அமைவாக தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

7.4 தேசிய மட்ட மத்தியஸ்தத்திற்கு ஆக்கங்களை தெரிவு செய்வதற்காக நடாத்தப்படும் மாகாண சித்திரங்களின் மத்தியஸ்தம், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையுடன் மாகாண அழகியல் பணிப்பாளர், மாகாண சித்திரப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளரால் பொருத்தமான மத்தியஸ்த சபை ஒன்றை நியமித்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 8 சித்திரப் போட்டிகள் நடாத்தப்படும் கட்டங்கள் மற்றும் கால எல்லைகள்

### 8.1 கீழே குறிப்பிடப்பட்டுள் திகதிகளுக்கமைய அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டிகளின் பல்வேறு கட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

- **முதலாம் கட்டம்** - *2023.04.19ம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களை தமது பாடசாலை உரித்தாகும் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல்.*

- **இரண்டாம் கட்டம்** - *வலய மத்தியஸ்தத்தின் மூலம் ஆக்கங்களை தெரிவு செய்தல் மற்றும் அவ்வாறாக தெரிவு செய்யப்படும் மாணவர்களை கல்வி வலயத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட இடம் ஒன்றிற்கு வரவழைத்து வலய மட்டத்தில் சித்திரப் போட்டிகளை நடாத்தி வலய பெறுபேற்றுப் பட்டியல் மற்றும் ஆக்கங்களை மாகாண அழகியல் கல்விப் பணிப்பாளரிடம் 2024.04.23ம் திகதிக்கு முன்னர் கையளித்தல்.*

- **மூன்றாம் கட்டம்** - *மாகாண மட்ட மத்தியஸ்தத்தை மேற்கொண்டு நிலத் தோற்றம் மற்றும் கணிணி சித்திர ஆக்கங்களின் பெறுபேறுகள் பட்டியல் மற்றும் ஆக்கங்களுடன் ஏனைய போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய பெறுபேறுகள் பட்டியலை கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பணிப்பாளரிடம் 2024.05.24ம் திகதிக்கு முன்னர் கையளித்தல்.*

- **நான்காம் கட்டம்** - *தேசிய மட்ட போட்டிக்குரிய சித்திரங்களை தெரிவு செய்வதற்காக கல்வி அமைச்சின் அழகியல் கிளையினூடாக நடாத்தப்படும் முதல் கட்ட மத்தியஸ்தத்தை மேற்கொண்டதன் பின்னர் தெரிவுசெய்யப்படும் சித்திரங்களை வரைந்த மாணவர்களை வரவழைத்து 2024 ஜூன் மாதம் 15 மற்றும் 16ம் திகதிகளில் நிலத் தோற்றத்திற்குரிய தேசிய மட்ட போட்டியையும் (படி நிலை 1), 2024 ஜூன் மாதம் 29 மற்றும் 30ம் திகதிகளில் தேசிய போட்டியையும் (படிநிலை 2) நடாத்துதல்.*

## 9 போட்டி மத்தியஸ்தம்

*9.1 வலயப் போட்டிகளுக்கு தமது வலயத்தின் அழகியல் அல்லது சித்திரப் பாடத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் தேர்ச்சி பெற்ற மத்தியஸ்த சபை ஒன்றை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமித்துக் கொள்ள வேண்டும். வலயப் போட்டிகளுக்குரிய மத்தியஸ்தத்திற்கு மொத்தப் பொறுப்பும் வலயத்திற்கான சித்திரப் பாடக் கல்விப் பணிப்பாளரை சாரும் என்பதனால், இதற்காக சித்திரக் கலைக்குரிய பாடப் பணிப்பாளார்கள் அல்லது ஆசிரியர் ஆலோசகர்கள் அல்லது மூன்று பேர் உள்ளடங்கிய மத்தியஸ்த சபை ஒன்றை நியமனம் செய்து கொள்ள வேண்டும்.*

*9.2 போட்டியில் பிரதான சுற்றுக்குரிய மத்தியஸ்தத்திற்கான பொறுப்பு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சித்திரப் பாடப் பணிப்பாளரையே சாரும். இதற்காக பாடத்தில் தேர்ச்சியுடன் கூடிய மத்தியஸ்த சபை ஒன்றை அவ் உத்தியோகத்தருக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சித்திரப் பாடப் பணிப்பாளரது பரிந்துரையுடன் பொறுப்புடமையுடன் கூடியதும் தேர்ச்சிகளுடன் கூடியதுமான மத்தியஸ்த சபை ஒன்றை மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் நியமித்துக் கொள்ள வேண்டும்.*

*9.3 மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வலயங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற சித்திரங்களை ஆரம்ப மத்தியஸ்தத்திற்கு உட்படுத்தி, அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வெற்றிபெற்ற மாணவர்களது சித்திரங்கள் மற்றும் பெறுபேறுகள் ஆவணத்தை கல்வி அமைச்சின் அழகியல் கல்விக் கிளைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*9.4 இறுதிச் சுற்றில் நிபுணத்துவம் பெற்ற மத்தியஸ்த சபையொன்று, கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பணிப்பாளரால், அழகியல் கல்விக் கிளையின் சித்திரக் கலை தொடர்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளரது பரிந்துரையுன் நியமனம் செய்யப்படும்.*

*9.5 2023 வருடத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களும் போட்டியில் கலந்துகொள்ள முடியும் என்றாலும், 2023 வருடத்தில் வெற்றிபெற்ற ஆக்கங்கங்களை இந்த வருடமும் அதே விதமாக முன்னிலைப்படுத்த முடியாது. அவ்வாறாக முன்னிலைப்படுத்தப்படும் பட்சத்தில் அவ் ஆக்கங்கள் போட்டியில் இருந்து அகற்றப்படும்.*

## 10 போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றமைக்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.

*6.1 மற்றும் 6.2 அட்டவணைகளுக்கு அமைவாக தேசிய மத்தியஸ்தத்திற்கு அனுப்பப்பட்ட அவ் அவ் ஆக்கங்களின் எண்ணிக்கைக்கு அமைய தேசிய சுற்றில் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றிகள் கீழே 10.1 மற்றும் 10.2 அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் அனைத்து வயதுக் குழுக்களுக்கும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளும், ஞாபகார்த்த விருதுகளும், சிறப்புத் தேர்ச்சி விருதுகளும், தேர்ச்சி விருதுகளும் வழங்கப்படவுள்ளன. அவ் அவ் போட்டி நிகழ்ச்சிப் பிரிவுகளுக்கு உரித்தான ஞாபகார்த்த விருதுகள் கீழுள்ளவாறு பெயரிடப்படுகின்றன.*

| | | |
|---|---|---|
| **நிறப்பூச்சு பூசுதல்** | **-** | **ஜோர் கீட் ஞாபகார்த்த விருது** |
| **பாணிகள்** | **-** | **எல். டீ. பீ மஞ்சுஸ்ரீ ஞாபகார்த்த விருது** |
| **கிரபிக்** | **-** | **சோலியஸ் மெண்டிஸ் ஞாபகார்த்த விருது** |

### 10.1 6-11 வகுப்புக்களுக்கு வெற்றிகளை வழங்குதல்.

| தரம் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | முதலாம் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை | ஞாபகார்த்த விருது | சிறப்புத் தேர்ச்சி விருது | தேர்ச்சி விருதுகளின் எண்ணிக்கை | மொத்த விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6-7 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | 2. நாகரீக வடிவமைப்பு | | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| 8-9 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | 2. நாகரீக வடிவமைப்பு | | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | 3. கிரபிக் ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| 10-11 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | | **கலப்பு கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 05 | 32 | 20 | 60 |
| | 2. பாரம்பரிய சித்திரங்களுடன் தழுவியதாக நவீன ஆக்கங்கள் | **விரும்பிய வர்ண ஊடகத்தில்** | 01 | 01 | 01 | 05 | 27 | 10 | 45 |
| | 3. நிலத்தோற்ற சித்திரம் | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |
| | 4. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல். | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |
| | 5. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலங்கார ஆக்கங்கள் | | | | | | | | |
| | 6. நவீன ஆக்கபூர்வமான அலங்கார ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |
| | 7. பல்வேறு வடிவிலான பொருட்களுக்கு நவீனமய ஆக்க திட்டங்களை வரைதல். | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |
| | 8. விளக்கச் சித்திரம் | | 01 | 01 | 01 | 05 | 27 | 10 | 45 |
| | 9. விளக்கச் சித்திரம் | | 01 | 01 | 01 | 05 | 27 | 10 | 45 |
| | 10. புத்தக அட்டை | | 01 | 01 | 01 | 05 | 27 | 10 | 45 |
| | 11. பொதி உறை மற்றும் மேலுறை | | 01 | 01 | 01 | 05 | 27 | 10 | 45 |
| | 12. காட்டூன் சித்திரம் | | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |
| | 13. கணணி சார் கிரபிக் ஆக்கங்கள் | கணினிப் பயன்பாடு | 01 | 01 | 01 | 05 | 15 | 10 | 33 |

### *10.2* *12-13* வகுப்புக்களுக்கு வெற்றிகளை வழங்குதல்.

| **தரம்** | **போட்டி நிகழ்ச்சி** | **ஊடகம்** | **முதலாம்** | **இரண்டாம்** | **மூன்றாம்** | **ஞாபகார்த்த விருது** | **சிறப்புத் தேர்ச்சி விருது** | **தேர்ச்சி விருதுகளின் எண்ணிக்கை** | **மொத்த விருதுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12-13 | 1. **கருத்து வெளிப்பாட்டு சித்திரம்** | **திரவ ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | | **திட ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | | **கலப்பு ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | | **கொலாஜ் ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 2. பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய **நவீன** ஆக்கம் | **விரும்பிய வர்ண ஊடகம்** | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 3. பாரம்பரிய சித்திரங்களை **வரைதல்** | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 4. நிலத்தோற்றம் - பார்த்து வரைதல் | | 01 | 01 | 01 | 02 | 30 | 25 | 60 |
| | 5. நிலத்தோற்றம் – ஆக்கபூர்வமான | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 6. மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | | 01 | 01 | 01 | 02 | 30 | 25 | 60 |
| | 7. அசையாத பொருட்களைப் பார்த்து வரைதல் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 8. உள்நாட்டு அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி இருபரிமான அலங்கார ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 9. புதிய ஆக்கபூர்வமான இரு பரிமான அலங்கார ஆக்கங்கள் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 10. பல்வேறு வடிவிலான பொருட்களுக்கு நவீனமய வடிவமைப்பு திட்டங்களை வரைதல் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 11. சுவரொட்டிச் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 12. விளக்கச் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 13. புத்தக அட்டை | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 14. பொதி உறை மற்றும் மேலுறை | | 01 | 01 | 01 | 02 | 20 | 15 | 40 |
| | 15. காட்டூன் சித்திரம் | | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |
| | 16. கணணி சார் கிரபிக் ஆக்கங்கள் | கணினிப் பயன்பாடு | 01 | 01 | 01 | 02 | 10 | 05 | 20 |

இப் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து போட்டியாளர்கள், அவர்களை முன்னிறுத்தும் ஆசிரியர்கள் மற்றும் உரிய அதிபர்கள் போட்டிகள் நடைபெறும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் போட்டி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்ட விதிமுறைகளையும் பின்பற்றுவதற்கும், நடுவர் குழுவின் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதற்கும் கடமைப்பட்டுள்ளனர்.

*(படிவம் 01)*

*மாணவர்களுக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்*

## ***அகில இலங்கை பாடசாலை சிறுவர் சித்திரப் போட்டி – 2024***

1. மாணவன்/ மாணவியின் பெயர் :- …………………………………………………………………………………..
2. முதலெழுத்துக்களுடன் பெயர்:- ……………………………………………………………………………………

   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் குறிப்பிடவும்)
3. பாடசாலை (தாய் மொழியில்) :- …………………………………………………………………………………..

   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :- …………………………………………………………………………………

   பாடசாலை முகவரி :- ………………………………………………………………………………………………

   பாடசாலை இலக்கம் :- ………………………………….

   பாடசாலை தொலைபேசி இலக்கம் :- …………………………………………………
4. தனிப்பட்ட முகவரி:- ………………………………………………………………………………………………

   தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………
5. மாகாணம் :- ……………………………………………
6. கல்வி வலயம் :- ……………………………………….
7. முன்னிலையாகும் போட்டி நிகழ்ச்சி :- …………………………………………………
8. முன்னிலையாகும் ஆக்க ஊடகம் :- ………………………………………………………………………
9. ஆக்கத்திற்குரிய தலைப்பு :- ……………………………………………………………………………………….
10. கல்வி கற்கும் தரம் :- ……………………………………………………………………….
11. சித்திரக் கலை ஆசிரியரின் பெயர் :- திரு/ திருமதி ……………………………………………………………………….

    தொலைபேசி இலக்கம் :- …………………………………………………………….

திகதி: ……………………………………………………………… ………………………………………………………….

மாணவன்/ மாணவியின் கையொப்பம்

---

***அதிபரின் பரிந்துரை :-***

பின்புறமாக உள்ள ஆக்கம் இம் மாணவன்/ மாணவியுடையது என்பதுடன், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

கையொப்பம் :- ………………………………………………

திகதி :- ………………………………………………………….. ………………………………………………………….

உத்தியோகபூர்வ பதவி முத்திரை

*(படிவம் 02)*

*மாணவர்களுக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்*

***<u>அகில இலங்கை பாடசாலை சிறுவர் சித்திரப் போட்டி – 2024</u>***

1. *மாணவன்/ மாணவியின் பெயர் :- …………………………………………………………………………………..*
2. *முதலெழுத்துக்களுடன் பெயர்:- ……………………………………………………………………………………*

   *(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் குறிப்பிடவும்)*
3. *பாடசாலை (தாய் மொழியில்) :- …………………………………………………………………………………..*

   *(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :- ……………………………………………………………………………*

   *பாடசாலை முகவரி :- ………………………………………………………………………………………………*

   *பாடசாலை இலக்கம் :- ……………………………….*

   *பாடசாலை தொலைபேசி இலக்கம் :- ………………………………………………*
4. *தனிப்பட்ட முகவரி:- ………………………………………………………………………………………………*

   *தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………*
5. *மாகாணம் :- ………………………………………*
6. *கல்வி வலயம் :- …………………………………….*
7. *முன்னிலையாகும் போட்டி நிகழ்ச்சி :- …………………………………………………*
8. *முன்னிலையாகும் ஆக்க ஊடகம் :- ………………………………………………………………………*
9. *ஆக்கத்திற்குரிய தலைப்பு :- ………………………………………………………………………………………….*
10. *கல்வி கற்கும் தரம் :- …………………………………………………………………..*
11. *சித்திரக் கலை ஆசிரியரின் பெயர் :- திரு/ திருமதி …………………………………………………………………….*

    *தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………….*

*திகதி: ……………………………………………………………*  *……………………………………………………….*

*மாணவன்/ மாணவியின் கையொப்பம்*

---

***வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை :-***

*பின்புறமாக உள்ள ஆக்கம் இம் மாணவன்/ மாணவியுடையது என்பதுடன், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.*

*கையொப்பம் :- ……………………………………………*

*திகதி :- …………………………………………………………*  *……………………………………………………….*

*உத்தியோகபூர்வ பதவி முத்திரை*